# கனமழையினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக சேதம் பாதிப்படைந்தோர் 7 இடைத்தங்கல் முகாம்களில் தஞ்சம்!

## அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவிப்பு

**வடமாகாணத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் கனமழையினால் முல்லைத்தீவு மாவட்டம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.**

**இந்த மாவட்டத்தில் மாத்திரம் 2,113 குடும்பங்களை சேர்ந்த 6,268 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**

**முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அம்பாள்புரம், கரும்புள்ளியான், ஒட்டறுத்தகுளம், நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், செல்வபுரம், பாலிநகர், சிராட்டிகுளம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 333 குடும்பங்களை சேர்ந்த 1,076 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் மாங்குளம், பனிக்கன்குளம், பண்டார வன்னி, கருவேலன்கண்டல், இந்துபுரம், தட்டையர்மலை, புளியங்குளம், கூழாமுறிப்பு உள்ளிட்ட ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 592 குடும்பங்களை சேர்ந்த 1,748 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

2 ➤



மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 02 புதன்கிழமை 20.12.2023 கதிர் 140




## சோலார் பனல்களின் விலை 2 இலட்சத்தால் அதிகரிக்கும்!



புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மூலம் மின்சார உற்பத்தியை அதிகரிப்பது தொடர் பில் இந்நாட்களில் பேசப்படுகின்ற போதிலும், எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அறவிடப் படவுள்ள 18 வீத வற் வரி காரணமாக சோலார் பனல் ஒன்றின் விலை சுமார் இரண்டு இலட்சம் ரூபாவினால் அதிகரிக்கப்படும் என இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் செயலாளர் லக்மால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சூரிய சக்தி மூலம்

மின்சாரம் தயாரிக்கும் வாய்ப்பு கைநழுவிப் போகவுள்ளதாகவும், அடுத்த வருடமும் எரிபொருள், நிலக்கரி போன்ற விலை கூடிய மூலங்களிலிருந்து மின்சாரம் தயாரிக்க வேண்டிய நிலையே ஏற்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் தெரிவித்த அவர், இதற்கு மாற்றாக சோலார் பெனல்களின் விலையை குறைப்பதே முக்கியமாக செய்ய வேண்டியதாகும். எனினும், இதுவரை இல்லாத வற் வரியின் காரணமாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் முடங்கும் நிலையே தோன்றும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ரெதி-16)

## வங்கிக்கடனுக்காக சொத்துக்களை ஏலம் விடும் சட்டம் தற்காலிகமாகக் கைவிடப்படவேண்டும்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து



வங்கிக் கடன் பெற்று மீளச் செலுத்தாதவர்களது சொத்துக்களை ஏலம் விடும் பரேட் சட்டத்தை தற்காலிகமாக கைவிட அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

பரேட் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களின் பிரச்சினைகள் தொடர்பாக வெளியிட்டுள்ள காணொளியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஈஸ்டர் தாக்குதல்,

2 ➤

## 18 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி

உள்ளூர் சந்தையில் முட்டையின் விலையை ஸ்திரப்படுத்தும் நோக்கில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறை மூலம் அடையாளம் காணப்பட்ட இந்தியப் பண்ணைகளில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, டிசம்பர் 31 க்கு முன்னதாக மேலும் 18 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனம் ஏற்கனவே 155 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

2 ➤

## 16 ஆவது சுற்றுச்சூழல் தேசிய முகாம் ஆரம்பம்

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் நாட்டின் பாடசாலை கட்டமைப்பில் நடைமுறைப்படுத்தப்படும் சுற்றாடல் முன்னோடித் திட்டத்தின் 16 ஆவது சுற்றாடல் முன்னோடி தேசிய முகாம் இன்று (20) முதல் 23ஆம் திகதி வரை மஹரகம தேசிய கல்வி நிறுவக வளாகத்தில் நடைபெறுகின்றது.

சுற்றாடல் ஆர்வலர்கள் 300 பேர் வரையில் முகாமிடும் இந்த வருடத்திற்கான முகாமின் உத்தியோகப்பூர்வ ஆரம்ப நிகழ்வு நாளை (21) காலை 8.30 க்கு சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தலைமையில் நடைபெறவுள்ளது. (ரெதி-17)

## ஜனவரி 1 முதல் தீவிர தொழிற்சங்க நடவடிக்கை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டால் ஜனவரி முதலாம் திகதி முதல் தீவிரமான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதற்காக முன்வைக்கப்பட்ட யோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டால் இவ்வாறு தாம் தொழிற் சங்க நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடப் போவதாக அச்சங்கம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழுவில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் குறிதத் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து தற்போது வரை, நாடு விசேட வைத்தியர்கள் உட்பட 1700 இற்கும் அதிகமான வைத்தியர்களை இழந்துள்ளதுடன், 5,000 இற்கும் அதிகமான வைத்தியர்கள் விரைவில் நாட்டை விட்டு வெளியேறும் அபாயம் உள்ளதாகவும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

வைத்தியர் பற்றாக்குறை காரணமாக 20 சிறிய வைத்தியசாலைகள் முற்றாக மூடப்பட்டுள்ளதுடன் 400 இற்கும் மேற்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் விசேட வைத்திய பிரிவுகள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் சங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (04)

## விசேட போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் 2,296 பேர் கைது

### யாழில் 3 தினங்களில் 70 பேர் கைதாகினர்

விசேட போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கடந்த 24 மணித்தியாலங்களில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 2,296 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 109 பேருக்கு எதிராக தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளதுடன், 14 சந்தேக நபர்கள் தொடர்பில் சொத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் 184 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விசேட பணியகத்தின் தேடப்பட்ட சந்தேக நபர்கள் பட்டியலில் இருந்த 218 சந்தேக நபர்களும் இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

1 கிலோ 170 கிராம் ஹெரோயின், 648 கிராம் ஐஸ்,

2 ➤

# பசுமை உயிர் உரம் யாழில் அறிமுக விழா!




பசுமை உயிர் உரம் அறிமுக விழா இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள கற்பகவனம் அலுவலகத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் துறைசார் நிபுணர்கள், ஆர்வலர்கள், விவசாய முயற்சியாளர்கள் என பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மின்சாரக் கட்டணம் ஜனவரியில் குறையும்

மின் கட்டண மறுசீரமைப்பு ஜனவரி மாதம் மேற்கொள்ளப்படும் போது மின் கட்டணம் குறைக்கப்படும் என அமைச்சர் கஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த நாட்களில் பெய்துள்ள கடும் மழையின் காரணமாக, மின்னுற்பத்தி நீர்நிலைகளுக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதனால் நீர் மின்னுற்பத்தியும் அதிகரித்திருப்பதால், அடுத்த மாதம் மின்கட்டணத்தை குறைக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது

புத்தளம் - நவகத்தேகம , வெம்புவெவ பகுதியில் உள்ள 14 வயது பாடசாலை சிறுமியை பலவந்தமாக கடத்தி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார் என்ற சந்தேகத்தின் பெயரில் இளம் வயது இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருவிட்ட, கெமுனுஹேவா பலகாயவில் பணியாற்றும் வஹரக - தலுவெல பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இராணுவ சிப்பாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என நவகத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானதாக கூறப்படும் குறித்த சிறுமி , மருத்துவ பரிசோதனைக்காக ஆனமடுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான இளம் இராணுவ சிப்பாயை ஆனமடுவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நவகத்தேகம பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## விசேட போதைப்பொருள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

11 கிலோ 600 கிராம் கஞ்சா, 46 கிலோ 285 கிராம் கஞ்சா மற்றும் 19,507 மாத்திரைகளும் கடந்த 24 மணித்தியாலங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் கடந்த 3 தினங்கள் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையில் 70 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திய பொலிஸார், வைத்திய அறிக்கை கிடைக்கப்பெற்றதும் அவர்களை நீதிமன்றங்களில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதேவேளை எதிர்வரும் நாட்களிலும் இந்த விசேட நடவடிக்கைகள் தொடரும் எனவும், போதைப்பொருள் வியாபாரிகள் சிலரை அடையாளம் கண்டுள்ள நிலையில் அவர்களை கைது செய்வதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (04)

## 18 மில்லியன் முட்டைகளை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூர் திறந்த வர்த்தக சந்தையில் முட்டையின் சில்லறை விலை தற்போது அதிகரித்து வருவதால், கால்நடை உற்பத்திகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பரிந்துரைப்புக்கமையவே இந்தியப் பண்ணைகளிலிருந்து முட்டைகளை மேலும் இறக்குமதி செய்வதற்கான வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரின் முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (ரெதி-15)

## வங்கிக்கடனுக்காக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா தொற்று மற்றும் வங்குரோத்து நிலைமை ஆகிய 3 பேரழிவுகளை எதிர்கொண்ட நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினரின் சொத்துக்கள், வர்த்தக முயற்சியாண்மைகள் மற்றும் வளங்கள் நீதிமன்றத் தலையீடு இன்றி பரேட் சட்டத்தின் (Parate execution) மூலம் உடனடியாக ஏலத்திற்கு விடும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

இதனால் தொழிலதிபர்கள் அழுத்தத்திற்கும் நிர்க்கதி நிலைக்கும் ஆளாகியுள்ளனர்.

தொழில் துறையானது பொருளாதார மற்றும் சமூக ரீதியாக மிகவும் வீழ்ச்சி நிலையை எட்டியுள்ளது. இதனால் சொத்துக்களின் ஏலங்கள் அதிகரித்துள்ளன.

இவ்விவகாரத்தில் அரசாங்கம் தலையிட வேண்டும்.

வங்கிகளின் ஸ்திரத்தன்மைக்குத் தாக்கம் இல்லாத வகையில் இதில் தலையிட்டு, அதைப் பேண பிரத்தியேக நிதியத்தை உருவாக்க வேண்டும்.

பரேட் சட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது தொடர்பாக அரசாங்கம் உடனடி கரிசனை காட்ட வேண்டும்.

அரசாங்கத்திற்கு சார்ப்பான நட்பு வட்டார தொழிலதிபர்கள், அரச வங்கிகளில் கோடிக்கணக்கில் கடன் பெற்று, கடனை செலுத்தாமல், கடன் ஒப்பந்தங்களில் தங்களுக்கு சாதகமாக திருத்தங்களைச் செய்துள்ளனர்.

இவ்வாறு பாரிய கடன் பெற்றவர்களுக்கு ஒரு கவனிப்பும், நுண், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு தனியான கவனிப்பும் வழங்கப்படுவது தொடர்பாக அரசாங்கம் தமது நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்ய வேண்டும், எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கனமழையினால் முல்லைத்தீவு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கள்ளப்பாடு, சிலாவத்தை, செல்வபுரம், வற்றாப்பளை, தண்ணிமுறிப்பு, முள்ளியவளை தெற்கு, கொக்குத்தொடுவாய் வடக்கு, செம்மலை, மற்றும் உப்புமாவெளி உள்ளிட்ட கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 450 குடும்பங்களை சேர்ந்த 1,366 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் அணிஞ்சியன்குளம், உயிலங்குளம், ஆலங்குளம், மல்லாவி, யோகபுரம் கிழக்கு, அமைதிபுரம், புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, திருநகர் உள்ளிட்ட கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 251 குடும்பங்களை சேர்ந்த 765 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் புதுக்குடியிருப்பு மேற்கு, தேவிபுரம், மாணிக்கபுரம், உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு தெற்கு மற்றும் வள்ளிபுனம் மன்னாகண்டல் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 472 குடும்பங்களை சேர்ந்த 1,277 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் 15 குடும்பங்களை சேர்ந்த 36 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மொத்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 2113 குடும்பங்களை சேர்ந்த 6268 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் 7 இடைத்தங்கல் முகாம்களில் தற்போது தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த நிலைமை ஓரளவு குறைந்து வருகின்ற நிலையில் தற்போது 2 இடைத்தங்கல் முகாம்களில் 176 குடும்பங்களை சேர்ந்த 524 பேர் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும், பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கான சமைத்த உணவு மற்றும் அத்தியாவசியத் தேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

விற்பனையாளர் தேவை
**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
மாலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# பாடசாலைகளில் கலை மன்றங்களை அமைக்கும் வேலைத் திட்டம் கிழக்கில்



(எம்.ஏ.றமீஸ்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலம் பாடசாலைகளில் கலை மன்றங்களை அமைக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் நேற்று (19) இது தொடர்பான விசேட நிகழ்வொன்று இடம்பெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், அக்கரைப்பற்று கல்வி வலய தமிழ்ப் பாட ஆசிரிய ஆலோசகர் எம்.ஏ.சவுறுதீன் உள்ளிட்டோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்களின் கலை இலக்கிய ஆற்றல்களையும், ஆளுமைகளையும் மேம்படுத்தும் நோக்கில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்டு வரும் இவ்வேலைத் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 17 பாடசாலைகளில் இவ்வாறு கலை மன்றங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளன.

இதற்கமைவாக அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் கருங்கொடி கலாமன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு, அதற்கென நிருவாகத் தெரிவும் இதன்போது இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது கலைகள் தொடர்பான நூல்கள் சில மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்யோகத்தரினால் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது ஆசிரியர்களான ஏ.எல்.எம்.இல்யாஸ், எம்.ஏ.றமீஸ், என்.ரி.நஸ்றீனா, எம்.ஏ.ஹக்கீமா, ஏ.எம். சாஹித், அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ. பர்ஸானா மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பாடசாலை மாணவர்களுக்கான போதை ஒழிப்பு விழிப்புணர்வு





(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயல பகுதிக்குட்பட்ட தி.கி.சிராஜ் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களுக்கான போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வு இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம் பெற்ற குறித்த நிகழ்வானது ழே னசரபள நாங்கள் லழரவா "போதைப் பொருள் அற்ற இளைஞர் தலைமுறை" என்ற தொனிப் பொருளின் கீழ் நேற்று (19) பாடசாலையில் நடைபெற்றது.

போதைப் பொருள் தடுப்புக்காக பாடசாலை மாணவர்கள், மாணவத் தலைவர்கள் மற்றும் இளைஞர் தலைவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வாக இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

போதைப் பொருளை ஒழிப்பதும் பாவனைகளை கட்டுப்படுத்தவும் இளைஞர்களின் ஒத்துழைப்பு மற்றும் சமூக மட்டத்திலான ஒத்துழைப்புக்கள் தொடர்பிலும் இந்தநிகழ்வில் விரிவாகப் பேசப்பட்டது.

இதில் சமுதாயம் சார் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.ஹம்சபாலன், உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச்.முகம்மது றியாத், இளைஞர் சேவை அதிகாரி ஐ.ஜாபீர் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு சாய்ந்தமருதில் சேவைநலன் பாராட்டு



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எம். இஸ்ஸானா, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம். நபார், கே. ஆதம்பாவா, மாவட்ட செயலகத்திற்கு தலைமை காணி உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்றுச் சென்ற கே.ராபி, இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள கலாசார உத்தியோகத்தர் எஸ்.சுரேஸ்குமார், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எச்.எம். ஹம்சார், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.எப்.சகிலா, எம்.எப். றாஜிதா, ஏ.ஆர். றினோஸா, எஸ்.ஐ. பஸ்மியா ஆகியோருக்கான பிரியாவிடை நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலக நலன்புரிச் சங்க செயலாளர் எம்.ஹுசைன் முபாரக் அவர்களின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், நிருவாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம்ஸான், நிருவாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.நளீர், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.சி.எம். நஜீம், மேலதிக மாவட்ட பதிவாளர் ஐ.எம். பாயிஸ், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.சி. முஹம்மட், நிதி உதவியாளர் எம்.எஸ்.எம். றியாஸ், பிரிவுக்கான பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஓய்வு பெற்ற மற்றும் பதவி உயர்வு பெற்ற நான்கு உத்தியோகத்தர்களும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களுக்கு நினைவு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டு அவர்கள் அலுவலகம் மற்றும் பொதுமக்களுக்கு ஆற்றிய பணிகள், காரியாலய கடமைகளில் அவர்களின் முன் மாதிரியான செயற்பாடுகள் குறித்து பல உத்தியோகத்தராலும் நினைவுகூரப்பட்டது.



# சீனாவில் நிலநடுக்கம் - 127 பேர் உயிரிழப்பு!



சீனாவின் வடமேற்கே திங்கள்கிழமை நள்ளிரவு ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 127 பேர் பலியாகியதோடு, 734 பேர் காயமடைந்துள்ளனர். சுமார் 20 பேர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்த நாட்டில் கடந்த 9 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள மிக மோசமான நிலநடுக்கம் இதுவாகும்.

சீனாவின் கான்சு மாகாணம், ஷி ஷிஷன் மாவட்டத்தில் கடந்த திங்களன்று நள்ளிரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் அந்த நிலநடுக்கம் 5.9 முதல் 6.2 அலகுகளாகப் பதிவானது. இந்த நிலநடுக்கத்தால் அருகிலுள்ள மக்கள் நெருக்கம் மிகுந்த கின்காய் மாகாணமும் பாதிப்புக்குள்ளானது.

இதில், கான்சு மாகாணத்தில் 113 பேரும், கின்காயில் 14 பேரும் உயிரிழந்தனர். இரு மாகாணங்களிலும் 734 பேர் காயமடைந்தனர், என்று

இது தவிர, நிலநடுக்கத்துக்குப் பிறகு கிந்காய் மாகாணத்தில் 20 பேரைக் காணவில்லை என்று அரசுக்குச் சொந்தமான ஷின்ஹுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தின் மையம், ஷிஷிஷன் மாவட்டத்தின் தலாநகரான டாங்ஸியாங் நகருக்கு 8 கிலோமீற்றர் தொலைவில் உள்ள லியுகூ பகுதியில் அமைந்துள்ளது.

நிலநடுக்க மையம் கான்சு, கின்காய் ஆகிய இரு மாகாண எல்லைக்கோட்டுக்கு வெறும் 5 கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருந்ததால் இரு மாகாணங்களிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்க மையப் பகுதியைச் சுற்றிலும் உள்ள 50 கிலோமீற்றர் சுற்றளவில், கின்காய் மாகாணத்தில் மட்டும் 22 ஊர்கள் அமைந்துள்ளன. இதுவும் அதிக உயிரிழப்பு ஏற்பட்டதற்குக் காரணமாகும். நிலநடுக்கதால் கான்சு பகுசியில் மட்டும் 1,55,393 வீடுகள் சேதமடைந்தன.

நிலநடுக்கதால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறும், காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும் அதிபர் ஷி ஜின்பிங், பிரதமர் லீ கியாங் ஆகியோர் உத்தரவிட்டுள்ளனர்.

சீனாவின் யுன்னான் மாகாணத்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 617 பேர் உயிரிழந்தனர். அதற்குப் பிறகு தற்போது ஏற்பட்டுள்ள நிலநடுக்கம்தான் மிக மோசமானது என்று கூறப்படுகிறது.

தற்போது நிலநடுக்கம் ஏற்பட்டுள்ள பகுதி, கண்டத் தகடுகள் நகர்ந்து ஒன்றுடன் ஒன்று உராய்வதால் நிலநடுக்க அபாயப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதியாகும். (04)

# போருக்கு நடுவில் பிறந்த குழந்தை போரிலேயே பலி காஸாவில் இஸ்ரேலின் குண்டு வீச்சினால் சோகம்



போருக்கு நடுவில் பிறந்த குழந்தை போரிலேயே பலியாகிய சம்பவம் காஸாவில் நிகழ்ந்துள்ளது.

காஸாவின் தெற்கு பகுதியான ராஃபாவில் இஸ்ரேல் நிகழ்த்திய குண்டுவீச்சினால், பிறந்து 17 நாள்கள் கூட ஆகாத பெண் குழந்தை பலியாகியுள்ளது.

விடியலுக்கு முன்பு நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் தகர்க்கப்பட்ட அடுக்குமாடி வீட்டின் தளத்தில் வசித்து வந்த குடும்பத்தினர் கட்டிட இடிபாடுகளுக்கு இடையே சிக்கி உயிரிழந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் பிறந்த குழந்தை, அவளின் அண்ணன் 2 வயது சிறுவன் உள்பட 27 பேர் பலியாகியுள்ளனர். குழந்தைகளை இழந்த பெற்றோர் காயமுற்று இருப்பதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டரை மாதங்களாகத் தொடர்ந்து வரும் போரில் 20 ஆயிரத்திற்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் பலியாகியுள்ளதாகக் காஸா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் ராணுவம் காஸாவில் ஹமாஸின் இருப்பிடங்களைத் தாக்குவதாகத் தெரிவித்துள்ளது. மேலும், ஹமாஸ்தான் பொதுமக்களின் வாழ்விடங்களைப் பயன்படுத்துவதாகவும் குற்றம்சாட்டியுள்ளது.

இன்னும் பெயரிடப்படாத பெண் குழந்தை போர் மத்தியில் பலியாகியது பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. அல்-அமீரா அய்ஷா எனப் பெயரிட யோசித்ததாக குழந்தையின் குடும்பத்தினர் தெரிவிக்கிறார்கள்.

பலியாகிவரும் பாலஸ்தீனர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று காஸா அமைச்சகம் தெரிவித்துள்ளது. (04)

# அமெரிக்க அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிட டொனால்ட் ட்ரம்ப் தகுதியற்றவர் என தீர்ப்பளிப்பு



அமெரிக்க அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிட டொனால்ட் ட்ரம்ப் தகுதியற்றவர் என்று கொலராடோ மாகாண நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அமெரிக்காவின் 45ஆவது அதிபராக பதவி வகுத்த ட்ரம்ப், கடந்த 2021-ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிட்டார்.

அந்த தேர்தலில் ஜனநாயக கட்சியின் வேட்பாளர் ஜோ பைடனிடம் தோல்வியை சந்தித்த ட்ரம்ப், தோல்வியை ஏற்க மறுத்தார். தொடர்ந்து, வெள்ளை மாளிகைக்குள் நுழைந்த ட்ரம்பின் ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தினர். போராட்டக்காரர்கள் ஆயுதங்களை கொண்டு தாக்கியதால், அவர்களை கட்டுப்படுத்த பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் பலியாகினர்.

இந்தப் போராட்டத்தில் ட்ரம்புக்குத் தொடர்பு இருப்பதாக குற்றம்சாட்டப்பட்டு அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் உள்ள நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

அதேபோல், அமெரிக்க அதிபர் மாளிகையைவிட்டு காலி செய்த ட்ரம்ப், அரசின் முக்கிய ஆவணங்களை தேசிய ஆவணக் காப்பகத்தில் ஒப்படைக்காமல், எடுத்துச் சென்றதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையில், கொலராடோ நீதிமன்றத்தில் வெள்ளை மாளிகை மீதான தேசத் துரோக தாக்குதல் செய்ய காரணமாக இருந்ததாக ட்ரம்ப் மீது தொடரப்பட்ட வழக்கு ஒன்றில், அமெரிக்க அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிட ட்ரம்புக்குத் தகுதியில்லை என்று நேற்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

அமெரிக்க அரசுக்கு எதிராக ஆதரவாளர்களை திரட்டி கிளர்ச்சியில் ஈடுபட்டவர் பதவியில் இருக்க முடியாது என்ற அரசியலமைப்பின் 14 ஆவது சட்டத்திருத்த விதி 3 இன்படி இந்த உத்தரவை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

மேலும், குடியரசு கட்சியின் வேட்பாளரை தேர்ந்தெடுக்கும் தேர்தலின் வாக்குச் சீட்டில் ட்ரம்பின் பெயர் இடம்பெறக்கூடாது என்றும், அவ்வாறு இடம்பெற்றால் அவருக்கு அளிக்கும் வாக்கு செல்லாது என்றும் தெரிவித்துள்ளது.

இந்த தீர்ப்பை ட்ரம்ப் எதிர்த்த நிலையில், அவர் மேல்முறையீடு செய்யும் வகையில் ஜனவரி 4 ஆம் திகதி வரை தீர்ப்பை நிறுத்தி வைப்பதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க வரலாற்றில் இதுபோன்ற வழக்கைச் சந்தித்த முதல் அரசியல் தலைவர் டொனால்ட் ட்ரம்ப் என்பது குறிப்பிடத்தக்கது. (04)

# பிணைக் கைதிகள் பரிமாற்றப் பேச்சுகள் ஹமாஸ் அமைப்பு திடீரென நிராகரித்தது



இஸ்ரேலில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட பிணைக் கைதிகளை பரிமாற்றம் செய்துகொள்வது தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஹமாஸ் அமைப்பு திடீரென நிராகரித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் மூத்த அதிகாரி பாசிம் நயீம் செவ்வாய்க்கிழமை இஸ்ரேல் சிறைகளில் உள்ள பாலஸ்தீனக் கைதிகளுக்குப் பதிலாக, அந்த நாட்டின் பிணைக் கைதிகளைப் பரிமாற்றம் செய்துகொள்வது தொடர்பான எந்தவித பேச்சுவார்த்தையையும் ஹமாஸ் அமைப்பு திட்டவட்டமாக நிராகரிக்கிறது.

காஸாவில் தாக்குதல் நடத்தி பாலஸ்தீனர்களை இஸ்ரேல் ராணுவம் கொன்று குவித்து வரும் வரை இத்தகைய பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதில்லை என்பதே ஹமாஸின் உறுதியான நிலைப்பாடு ஆகும்.

அதே நேரம், காஸாவில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படுவதற்கும், அந்தப் பகுதி மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வருவதற்காக எல்லைகள் திறக்கப்படுவதற்கும் வகை செய்யும் எந்தவித முன்முயற்சியிலும் பங்கேற்கத் தயாராக இருக்கிறோம் என்றார் அவர்.

இஸ்ரேலுடன் அடிக்கடி மோதலில் ஈடுபட்டு வரும் ஹமாஸ் படையினர், இஸ்ரேலுக்குள் தரை, வான், கடல் வழியாக கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி நுழைந்து 1,200 க்கும் மேற்பட்டவர்களை கொலை செய்ததோடு, சுமார் 240 பேரை அங்கிருந்து அவர்கள் பிணைக் கைதிகளாகக் கடத்திச் சென்றதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

அதையடுத்து, ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழித்துக்கட்டுவதாகவும், பிணைக் கைதிகளை மீட்பதாகவும் சூளுரைத்த இஸ்ரேல், காஸாவில் தீவிர குண்டுவீச்சு நடத்தி வருகிறது. மேலும், காஸாவுக்குள் தரைவழியாகவும் நுழைந்து இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், கட்டார் முன்னிலையில் நடைபெற்று வந்த பேச்சுவார்த்தையில் பலனாக இஸ்ரேல் - ஹமாஸ் தரப்புகளுக்கு இடையே கடந்த மாதம் 24 முதல் 30 ஆம் திகதி வரை போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

அப்போது இஸ்ரேல் தரப்பில் 240 பாலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அவர்களில் 107 பேர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதற்குப் பதிலாக தங்களால் பிணைக் கைதிகளாகக் கடத்திச் செல்லப்பட்ட 105 பேரை ஹமாஸ் அமைப்பு விடுவித்தது. அவர்களில் 81 பேர் இஸ்ரேலியர்கள், 23 பேர் தாய்லாந்து நாட்டவர், ஒருவர் பிலிப்பின்ஸைச் சேர்ந்தவர்.

எனினும், போர் நிறுத்தத்தை மேலும் நீடிப்பதற்கான பேச்சுவார்த்தை முறிந்ததைத் தொடர்ந்து காஸா மீதான தாக்குதலை இஸ்ரேல் மீண்டும் தொடர்ந்தது.

இந்தச் சூழலில், தாக்குதல் தொடரும் வரை கைதிகள் பரிமாற்றப் பேச்சுவார்த்தையில் பங்கேற்கப் போவதில்லை, என்று ஹமாஸ் அமைப்பினர் தற்போது அறிவித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (04)





# கண்பார்வை, செவிப்புலனற்றோர் பாடசாலை மாணவர்களின் ஓவியக் கண்காட்சி கொழும்பில்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இரத்மலான செவிப்புலனற்றோர் பாடசாலை, இரத்மலான கண்பார்வையற்றோர் பாடசாலை மற்றும் யாழ்ப்பாணம் செவிப்புலனற்றோர் மற்றும் கண் பார்வையற்றோர் பாடசாலைகளுடன் இணைந்து ஒழுங்கு செய்திருந்த ஓவியக் கண்காட்சி அண்மையில் கொழும்பு ஹோட்டன் பிளேஸில் உள்ள ஜே.டீ.ஏ. பெரேரா கலரியில் இடம்பெற்றது.

செவிப்புலனற்றோர் மற்றும் கண் பார்வையற்றோர் சமூகத்தின் மத்தியில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய வர்கள். அவர்களிடமும் ஏனைய மனிதர்களிடம் இருக்கும் எண்ணங்களும், திறமைகளும் அவர்களிடையேயும் காணப்படும். அவர்களிடம் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர சந்தப்பம் வழங்கினால் அவர்கள் ஆச்சரியப்படத் தக்க வகையில் செயற்படுவார்கள் என்பதில் ஐயமில்லை, என்பதை வெளிப்படுத்தும் விதமாக இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இக்கண்காட்சியினை பார்வையிட்டு இவர்களின் திறமைகளை ஊக்கப்படுத்த நாட்டின் பல பாகங்களிலுமிருந்து பலர் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது.

## காரைதீவு பொது நூலகத்தில் வாசிப்புத் தின நிகழ்வுகள்



(எம்.எம்.றம்ஸீன்)

காரைதீவு பொது நூலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வாசிப்பு தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

காரைதீவு பிரதேச சபை செயலாளர் சுந்தரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

தேசிய நூலக வாரத்தையொட்டி நாடாத்திய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அதிதிகளினால் சான்றிதழும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

## இணையவழித் தாக்குதலால் ஈரான் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் செயல்பாடுகள் முடக்கம்

இணையவழித் தாக்குதல் காரணமாக ஈரானிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் செயல்பாடுகள் முடக்கப்பட்டதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்தச் செய்திகளில், ஈரான் நாட்டின் 70 சதவீத பெட்ரோல் நிலையங்களின் செயல்பாடுகள் திங்கள்கிழமை முடங்கின. மென்பொருள் கோளாறு காரணமாக இந்த முடக்கம் ஏற்பட்டது.

இணையவழியில் ஊடுருவி நடத்தப்பட்ட தாக்குதல் காரணமாக இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இது விரைவில் சரிசெய்யப்பட்டுவிடும். எனவே, பொதுமக்கள் பீதியடைந்து பெட்ரோல் நிலையங்களில் குவிய வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இணையவழித் தாக்குதலுக்கு 'கொஞ்ஜெஸ்கே தராண்டே' என்ற ஊடுருவல் குழு காரணமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. இதேபோன்று ஏற்கெனவே நடத்தப்பட்ட இணையவழித் தாக்குதல்களுக்கு இந்தக் குழு பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)




## இரு ஆசிரியர்களுக்கு சேவை நலன் பாராட்டு



(காரைதீவு சகா)

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் சிறப்பாக பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களான ரி.காண்டீபன் மற்றும் எஸ்.ரதிதேவன் ஆகியோருக்கான சேவை நலன் பாராட்டு விழா பாடசாலை அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் நேற்று (19) செவ்வாய்க்கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்வி பணிமனையின் பாடசாலை வலுவூட்டல் மேம்பாட்டு நிகழ்ச்சிச் திட்ட இணைப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

இடமாற்றலாகிச்சென்ற விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் ரி.காண்டீபன் பற்றி அதிபர், ஆசிரியர்கள் வாழ்த்துரையாற்றினர்.

இடமாற்றம் பெற்றுச் சென்ற விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் ரி.காண்டீபன் ஏற்புரை நிகழ்த்தினார். உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா சிறப்புரையாற்றினர். சிரேஷ்ட ஆசிரியர் ந.கோடீஸ்வரன் நன்றியுரையாற்றினார்.

# யாழ்ப்பாணத்தில் நாளை டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க அழைப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் சகல பாடசாலை வளாகங்கள், வைத்தியசாலை வளாகங்கள், அரச நிறுவனங்கள் அமைந்துள்ள வளவுகள், பல்கலைக்கழக வளாகங்கள், பல்கலைக்கழக விடுதிகள், அனைத்திலும் நாளை 21 ஆம் திகதி முழுநேர டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்தி குறிப்பில், யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கம் மிக உச்சநிலையை அடைந்துள்ளது. இன்றைய தினத்தில் (19) மட்டும் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்ட 111 டெங்கு நோயாளிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை மற்றும் தனியார் வைத்தியசாலைகளிலும் அனுமதிக்கப்பட்டிருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், யாழ் மாவட்டத்தில் இம்மாதம் 18 ஆம் திகதி வரை 886 டெங்கு நோயாளர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பூச்சியியல் ஆய்வுக்குழுவினர் யாழ் மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுகளில் மிக அதிகமான டெங்கு பரவல் இருப்பதாகவும் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் பெருகிக் காணப்படுவதாகவும் அடையாளம் கண்டுள்ளனர்.

குறிப்பாக வைத்தியசாலை வளாகங்கள், பாடசாலை வளாகங்கள், பல்கலைக்கழக வளாகங்கள், பல்கலைக்கழக விடுதிகள், அரசாங்க அலுவலகங்கள், அரசாங்க விடுதிகள், தனியார் கல்வி நிறுவன வளாகங்கள் போன்றவற்றில் டெங்கு தாக்கத்தை ஏற்படுத்தும் நுளம்புக்குடம்பிகள் பெருமளவில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படும் இந்நிலைமை ஏனைய பிரதேசங்களிற்கும் வியாபித்து யாழ் மாவட்டம் முழுவதும் டெங்குத் தாக்கம் ஏறத்தாழ அபாயகரமான நிலைமையை எட்டியுள்ளது.

எனவே, யாழ் மாவட்டத்தில் பின்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது –

01) சகல பாடசாலை வளாகங்கள், வைத்தியசாலை வளாகங்கள், அரச நிறுவனங்கள் அமைந்துள்ள வளவுகள், பல்கலைக்கழக வளாகங்கள், பல்கலைக்-கழக விடுதிகள், அனைத்திலும் 21 ஆம் திகதி முழுநேர டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேற்குறித்த அனைத்து வளாகங்களிலும் அங்கு கடமையாற்றுவோர் மற்றும் தங்கியிருப்போர் சிரமதானம் மூலம் நீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்கள் மற்றும் கொள்கலன்களை அகற்றி அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடவேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வளாகங்களின் அளவினைப் பொறுத்து இச்சிரமதான நடவடிக்கையானது தொடர்ந்து 22 ஆந் திகதியும் மேற்கொள்ள வேண்டியிருப்பின் தவறாது குறித்த சிரமதானம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

02) பொதுமக்கள் தங்கள் வீடு வளவுகளில் நீர் தேங்கி நிற்கக்கூடிய சகல கொள்கலன்களையும் அகற்றி, டெங்கு நுளம்பிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப் படவேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு அனைத்து அரசாங்க நிறுவனங்களும் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழக நிருவாகங்களும் ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் – என்றுள்ளது.

# புத்தளம் இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தினால் மாணவர்களுக்குக் கல்வி வழிகாட்டல் செயலமர்வு



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் இளம்கலை பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் புத்தளம் மணல்குன்று முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தரம் 11 மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டல் செயலமர்வு பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.மூசீன் தலைமையில் நடைபெற்றது.

இச்செயலமர்வில், புத்தளம் வெட்டாலை அசன் குந்தூஸ் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 11 இல் கல்வி பயிலும் சுமார் 30 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இச்செயலமர்வின் வளவாளர்களாக சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவரும் புத்தளம் இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தின் உறுப்பினருமான நஸ்லீம் மற்றும் இஸ்லாமிய வங்கி மற்றும் நிதி நிர்வாகம், உளவியல், கல்வி உளவியல் ஆகியவைகளில் பட்டம் பயின்றவரும் புத்தளம் தாருஸ்ஸலாம் மஸ்ஜித் செயலாளரும் புத்தளம் எஸ்.ஈ.ஸி கல்வி நிலையத்தின் இயக்குநரும் வவுனியா பல்கலைக்கழக மாணவரும் புத்தளம் இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தின் தலைவருமான ஷவ்வாப் றிபாயிஸ் ஆகிய இருவரும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பயன்மிகு பல கருத்துக்களையும் வழிகாட்டல்களையும் வழங்கினர்.







## நெல்லியடியில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட இளைஞர்

### பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம் நெல்லியடி பகுதியில் உள்ள பிரபல பாடசாலைக்கு அருகில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தி, இரண்டு நாட்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றில் அனுமதி பெற்று பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

பாடசாலைக்கு அருகில் உள்ள கடை ஒன்றில் ஹட்டன் பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவர் வேலை செய்து வந்துள்ளார். குறித்த இளைஞர் கடையில் வைத்து போதைப்பொருள் வியாபாரத்திலும் ஈடுபட்டு வருவதாக நெல்லியடி பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

அதன் அடிப்படையில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை குறித்த இளைஞரைக் கைது செய்த பொலிஸார் அவரது உடைமையில் இருந்து 5 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை கைப்பற்றியிருந்தனர்.

விசாரணைகளின் பின்னர், பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் இளைஞனை முற்படுத்திய பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், சந்தேகநபரை இரண்டு நாள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதிக்குமாறு விண்ணப்பம் செய்தனர்.

அதனை ஏற்றுக்கொண்ட மன்று, சந்தேகநபரை பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதித்துள்ளது.

சந்தேகநபரைத் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், சந்தேகநபருடன் போதைப்பொருள் விற்பனை வலையமைப்பைச் சேர்ந்தவர்களையும், சந்தேக நபரிடம் போதைப்பொருளை வாங்கி வந்தவர்களையும் அடையாளம் கண்டுகொண்டுள்ளதாகவும், அவர்களையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.


## யாழ்ப்பாண பல்கலை மாணவர் போதைப்பொருளுடன் கைது



யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் தென்னிலங்கை மாணவர் ஒருவர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், மாணவனைச் சோதனையிட்டபோது அவரிடமிருந்து போதைப் பொருளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதனையடுத்து மாணவனைக் கைது செய்த பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (O1)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.12.2023இல் வெளியிடப்பெற்றது.